முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.
இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 766**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**03.11.2021**, புதன்கிழமை

1. பார்காக்க வந்த வள்ளலே
பரமானந்த சதா சிவ சற்குருவே
சீர்திருத்தம் செய்து கலியுகத்தை
சித்திமிகு ஞான யுகமாக மாற்றவந்த மாதவசியே
2. தவசியே ஆறுமுக அரங்கனே
தர்மனே கலியுகத்தின் கர்ணனே
பெருமைமிக்க ஞானயுகம் படைக்க
பிரணவ சூட்சுமம் கண்டறிந்த தேசிகனே
3. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
வாசிவென்று உலக ஞானிகள் கூட்டம்
வையகத்தில் அரங்கன் உன்னை வறவேற்று வழிநடத்தி வர
4. வருகின்ற ஞானியர்கள் படைமூலம்
வையகத்தில் உன் தர்மம் சித்தி கண்டு
தருகின்ற உன் உபதேசத்தின் வழி
தரணியோர் கலியுகத்தின் ஞானிகள் ஆவரப்பா
5. அப்பப்பா அரங்கனே சிறந்த ஞானி
அளவில்லா அரங்கன் தர்மமே உயர்ந்த தர்மம்
மறுப்பின்றி கலியுகத்தார் அரங்கனை குருவே என ஏற்றால் போதும்
மறுமை அகலும் அவர்களுக்கு மரணமும் விலகும்
6. விலகுமே அனைத்து மாயை துன்பங்களும்
வினைகளும் விரண்டோடி அரங்கன் அருளாலே
தரணியில் அவர்களெல்லாம் ஞானிகள் ஆகி
தவராஜன் வேண்டும் வண்ணம் உலகமாற்றம்
7. மாற்றமதை கலியுகத்தில் செய்யும் காலம்
மகானாய் அவர்களுக்கும் பங்கு கிட்டி
ஆற்றல்பட இந்த கலியுகம் ஞானயுகமாக மாறும்
அரங்கன் வேண்டல் வரத்தின் மூலமாக
8. ஆகவே ஞான ஆட்சிக்காலம்
ஆறுமுகன் என் வெளிப்பாடாக பெருகி இனிதே
மாறுதலை இந்த கலியுகம் அடையும்
மகான் அரங்கனால் அற்புதம் நிகழும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–